செ.வெ.எண்: 41 நாள்: 16.11.2016

# பத்திரிகைச்செய்தி

## 18 வயது முதல் 45 வயதுடைய உடலியக்க குறைபாடுடையோர் மற்றும் காது கேளாத வாய்பேச இயலாதோர் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் பெற்றிட விண்ணப்பிக்கலாம். மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் மாற்றுத்திறனாளிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் விதத்தில் தையற்பயிற்சி பெற்ற 18 வயது முதல் 45 வயதுடைய உடலியக்க குறைபாடுடையோர், காது கேளாத மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத்திறனாளிகளுக்கு 2016-17 ஆம் ஆண்டிற்கான மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் வழங்கப்படவுள்ளது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் பயனடையாத மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் பெற விருப்பமுள்ள மாற்றுத்திறனாளிகள் புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் (அலுவலக தொலைபேசிஎண்- 04322-223678) மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையின் நகல், குடும்ப அட்டையின் நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் -1, கல்வி தகுதி பெற்றிருப்பின் அதற்கான சான்று அல்லது வயது சான்று மற்றும் தையற்பயிற்சி சான்றுகளுடன் 24.11.2016- அன்று மேற்படி முகவரியில் நடைபெற உள்ள நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளலாம் என்றும் விண்ணப்பங்களை அதற்கு முன்பே சமர்ப்பித்திடுமாறு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**